பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

01 12 2025 6 45

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது.

2. காவல்துறை குறித்த பொதுமக்களின் கண்ணோட்டத்தை மாற்றியமைக்கவேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு.நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

3. தமிழகத்தில் மழை அளவு படிப்படியாக குறைந்து வருவதால் நிவாரணம் மற்றும் மீட்பு பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

4. Ditwah புயல் வலுவிழந்து ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 17 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது.

19 நாட்கள் நடைபெற உள்ள இந்தக் கூட்டத்தொடரில் மொத்தம் 13 சட்டமசோதாக்கள் நிறைவேற்றப்பட உள்ளன.

தேசிய நெடுஞ்சாலைகள் திருத்த மசோதா, அணுசக்தி மசோதா, நிறுவன சட்ட திருத்தம், காப்பீடு சட்ட திருத்த மசோதா, இந்திய உயர்கல்வி ஆணைய மசோதா உள்ளிட்டவை முக்கியமான மசோதாக்கள் ஆகும்.

மக்களவையில் நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், மத்திய கலால் வரி திருத்த மசோதாவையும், சுகாதார பாதுகாப்புக்கான தேசிய பாதுகாப்பு தீர்வை மசோதாவையும் அறிமுகப்படுத்த உள்ளார்.

<<<<>>>>

காவல்துறை குறித்த பொதுமக்களின் கண்ணோட்டத்தை மாற்றியமைக்கவேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

ராய்ப்பூரில் நடைபெற்ற அகில இந்திய காவல்துறை தலைமை இயக்குநர்கள் மாநாட்டில் நேற்று உரையாற்றிய அவர், காவல்துறையின் தொழில்சார் திறன் மற்றும் துப்பறியும் திறன் ஆகியவற்றை மேம்படுத்த வேண்டும் என்று கூறினார்.

நகர்ப்புறங்களில் காவல் துறை கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டும் என்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு போதிய பாதுகாப்பு வழங்க காவல்துறையில் தனி பிரிவு உருவாக்க வேண்டும் எனறும் அவர் கேட்டுக்கொண்டார்.

புதிதாக இயற்றப்பட்ட குற்றவியல் சட்டங்கள் குறித்துப் பொதுமக்களிடம் விழிப்புணர்வை அதிகரிக்க வேண்டியதன் ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும் பிரதமர் இந்த கூட்டத்தில் எடுத்துரைத்தார்.

காவல்துறையில் தேசிய அளவில் உள்ள தரவுத்தளங்களைப் செயற்கை நுண்ணறிவு மூலம் இணைத்து, செயல்திறன் மிக்க உளவுத் தகவலை உருவாக்கவேண்டும் என்றும் பிரதமர் கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் திமுக ஆட்சியில்தான் பிற்படுத்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கான இடஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ஈரோட்டில் நேற்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இஸ்லாமியர்களுக்கும், அருந்ததியர்களுக்கும் உள்ஒதுக்கீடு திமுக ஆட்சியில்தான் வழங்கப்பட்டதாக கூறினார்.

அஇஅதிமுக ஆட்சியின்போது இடஒதுக்கீட்டை ரத்து செய்ய வருமான வரம்பைக் கொண்டுவந்தபோது அதைத் திமுக போராடி தடுத்து நிறுத்தியதாகவும் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் மழை அளவு படிப்படியாக குறைந்து வருவதால் நிவாரணம் மற்றும் மீட்பு பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளது என்று மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யா மொழி கூறியுள்ளார்.

நாகையில் டிட்வா புயல் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களை நேற்று நேரில் சந்தித்து ஆறுதல்கூறிய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

நாகை மாவட்டத்தில் சம்பா தாளடி பயிர்கள் நீரில் மூழ்கி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

(வாய்ஸ் பைட் அமைச்சர் - 35 செகன்ட்ஸ்)

<<<<>>>>

கடந்த நான்கரை ஆண்டுகால திமுக ஆட்சியில் தமிழகத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கூட திறக்கவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

கோபிசெட்டிபாளையத்தில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், அஇஅதிமுக ஆட்சிக்காலத்தில் மத்திய அரசு உதவியுடன் ஒரே ஆண்டில் 11 அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டதாக கூறினார்.

திமுக ஆட்சியில் அத்தியாவசியப் பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதாகவும், அதனை கட்டுப்படுத்த மாநில அரசு தவறிவிட்டதாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

<<<<>>>>

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் அருகே நேற்று நிகழ்ந்த சாலைவிபத்தில் 11 பேர் உயிரிழந்தது குறித்து குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தோர் குடும்பத்திற்கு தமது அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதாகவும், காயமடைந்தவர்கள் விரைந்து குணமடைய வேண்டும் என்றும் அவர கூறியுள்ளார்.

குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனும் இந்த விபத்து குறித்து வேதனை தெரிவித்துள்ளார்.

காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டும் என்று தாம் பிரார்த்திப்பதாகவும் கூறியுள்ளார்.

இந்நிலையில் இந்த விபத்தில் காயமடைந்து சிவகங்கை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் பயணிகளை மாநில அமைச்சர்கள் திரு. பெரியகருப்பன், திரு.சிவசங்கர் ஆகியோர் நேற்று நேரில் பார்வையிட்டு ஆறுதல் கூறினர்.

காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்குமாறு மருத்துவர்களை அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

<<<<>>>>

*Ditwah* புயல் வலுவிழந்து ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறியுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது இன்று பிற்பகலில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலு குறையும் என்றும், இதன் காரணமாக திருவள்ளூர், காஞ்சிபுரம், சென்னை, செங்கல்பட்டு, வேலூர் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களின் ஒருசில பகுதிகளில் கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருப்பத்தூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

நாகப்பட்டினத்தில் உள்ள புகழ்பெற்ற நாகூர் ஆண்டவர் தர்காவின் 469வது ஆண்டு கந்தூரி விழாவின் முக்கிய நிகழ்ச்சியான சந்தனக்கூடு ஊர்வலம் நேற்று கொட்டும் மழையிலும் வெகு விமரிசையாக நடைபெற்றது.

விடிய விடிய நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் தமிழகம் மட்டுமின்றி அண்டை மாநிலங்களில் இருந்தும் ஏராளமானோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte – Selvan Jebaraj – 44 Sec)*

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

இஸ்ரேல் - பாலஸ்தீன பிரச்சினைக்கு இரு நாடுகள் என்பதுதான் தீர்வாக இருக்கும் என்று போப்பாண்டவர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் அந்நாட்டு பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் தீவிரவாதிகள் 3 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

<<<<>>>>

அருணாச்சலப்பிரதேச எல்லையில் நிலவும் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக ராணுவ உயரதிகாரிகள் அம்மாநில ஆளுநர் திரு. K.T. Parnaik உடன் நேற்று ஆலோசனை நடத்தினர்.

<<<<>>>>

உலக எய்ட்ஸ் தினம் இன்று கடைபிடிக்கப்படுவதை முன்னிட்டு பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

<<<<>>>>

மோசமான வானிலை காரணமாக இலங்கை விமான நிலையத்தில் சிக்கித் தவித்த தமிழக பயணிகள் நேற்று சென்னை வந்தடைந்தனர்.

<<<<>>>>

நீலகிரி மாவட்டம் உதகையில் விடுதிகளுக்கும், தனியார் பள்ளிகளுக்கும் வெடிகுண்டு மிரட்டல் வந்ததையடுத்து காவல்துறையினர் நிபுணர்கள் உதவியுடன் தீவிர சோதனை நடத்தினர்.

<<<<>>>>

திருநெல்வேலியில் இருந்து மேட்டுப்பாளையத்திற்கு இயக்கப்படும் ரயில் சேவை மேலும் 2 மாதங்கள் நீட்டிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஈரோடு மாவட்டம் வெள்ளோடு அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவ-மாணவிகளுக்கு உயர்கல்விக்கான வழிகாட்டு புத்தகங்களை துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் நேற்று வழங்கினார்.

<<<<>>>>

*சென்னையில் நேற்று ஒரே நாளில் 726 செல்லப் பிராணிகளுக்கு வெறிநாய் கடி தடுப்பூசி செலுத்தப்பட்டு உரிமம் வழங்கப்பட்டதாக மாநகராட்சி தெரிவித்துள்ளது.*

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

*தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 17 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.*

*ராஞ்சியில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்ற தென்னாப்பிரிக்க அணி முதலில் பந்துவீச தீர்மானித்ததையடுத்து, பேட்செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 349 ரன் குவித்தது.*

*350 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் பேட் செய்த தென்னாப்பிரிக்கா, 49 புள்ளி 2 ஓவரில் 332 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.*

*குல்தீப் யாதவ் 4 விக்கெட்டுகளையும், அர்ஷித் ராணா 3 விக்கெட்டுகளையும், அர்ஷ்தீப் சிங் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.*

*<<<<>>>>*

*உலகக் கோப்பை ஜூனியர் மகளிர் ஹாக்கிப் போட்டி இன்று தொடங்குகிறது.*

*சாண்டியாகோவில் நடைபெறும் இப்போட்டியில் 24 அணிகள் பங்கேற்கின்றன.*

*இன்றிரவு நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா - நமீபியாவை எதிர்கொள்கிறது.*

*<<<<>>>>*

*17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கால்பந்து போட்டியில் பங்கேற்க இந்தியா தகுதி பெற்றுள்ளது.*

*அகமதாபாதில் நடைபெற்று வரும் இதற்கான தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியா 2-1 என்ற கோல் கணக்கில் ஈரானை வென்றது.*

*<<<<>>>>*

*பிரசிடெண்ட் கோப்பை டேக்வாண்டோ போட்டியில் இந்தியாவின் Rupa Bayor வெண்கலப் பதக்கம் வென்றார்.*

ஆஸ்திரியாவில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

*<<<<>>>>*

ஹாங்காங் ஓபன் ஸ்குவாஷ் போட்டி இன்று தொடங்குகிறது.

*<<<<The End>>>>*